1995 ஏப்ரல் 5]

(ஆ) பேராவூரணி—கொத்தமங்கலம் இடையே ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்து நிறுத்தப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணியிலிருந்து கொத்தமங்கலம் வரை ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்து தடம் எண் 7ஏ, சமீபத்தில் நிறுத்தப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

பேராவூரணியிலிருந்து கொத்தமங்கலம் வரை தடம் 7ஏ, 14 நடைகள் (Singles) தொடர்ந்து இயக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற நகரப் பேருந்து 7. நான் கேட்டது 7ஏ. 7ஏ தற்போது 14 சிங்கிள்ஸ் - நடைகள் தொடர்ந்து இயக்கப்படுகிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் மனு ஒன்றைக் கொடுத்து இந்த 7 நகரப் பேருந்து போதாது அதற்கு ஆப்போசிட் டைமாக ஒரு நகரப் பேருந்துவிட வேண்டும் என்று கோரியதின் அடிப்படையில் அதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு சிபாரிசு செய்து அனுப்பி அது சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானமாக கொண்டு வந்து அது உடனடியாக இயக்கப்பட்டது. ஆனால் 10 நாட்களிலே அந்த பஸ் நிறுத்தப்பட்டுவிட்டது. காரணம் அந்தச் சாலை பழுதுபட்ட நிலையில் இருந்ததனால் 7 மட்டும்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. 7ஏ நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே.7ஏ-ஐ -

[திரு. ஆர். சிங்காரம்] [1995 ஏப்ரல் 5

தற்போது சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு சிறப்பான முறையில் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களிடம் அதற்கும் மனு கொடுத்து அந்தச் சாலையை உடனடியாக தார்ச் சாலையாக மேம்பாடு செய்வதற்கு மனு கொடுத்து அது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்குச் சென்று உடனடியாக டெண்டர் விடப்பட்டு தற்போது வேலை முடிக்கப்பட்டுவிட்டு இருக்கிறது. ஆகவே சாலையும் சரியாக இருக்கிறது, மற்ற எல்லாமும் சரியாக இருக்கின்ற நேரத்தில் உடனடியாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி உடனே 7ஏ-ஐ ஆப்போசிட் டைமாக உடனடியாக இயக்குவதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 7ஏ-தான் 14 நடைகள் தொடர்ந்து இயக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலை பழுதடைந்திருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பேருந்துகளை இயக்க முடியவில்லை என்ற கருத்தை அவரே இங்கே குறிப்பிட்டார்கள். சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 1990-91-ஆவது ஆண்டு மட்டும் 25½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு அந்த போக்குவரத்துக் கழகம் பல்வேறு பேருந்து வழித்தடங்களிலே சாலைகள் சரியில்லாத காரணத்தினாலும் இயக்க முடியவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு அது குறைக்கப்பட்டு இருக்கிறது. 7 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மாதம் ஒன்றுக்கு 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் கூடுதலான வருவாயை ஈட்டுகின்ற அளவுக்கு அந்த போக்குவரத்துக் கழகம் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஒரு வார காலத்திலே நிறைவேற்றி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலே அந்த வழித்தடத்திலே பேருந்துகள் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இயக்கப்படும் என்று சொல்லிவிட்டார்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் உடனடியாக இயக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுதலையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

5. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1994-95-ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்தெட்டாவது மற்றும் ஐம்பத்தொன்பதாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 18-மருத்துவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 18-மருத்துவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மருத்துவம் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்